# <u>சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்</u>

1. வலிமையே வாழ்வு; பலவீனமே மரணம்.
2. நம்பிக்கை, நம்பிக்கை – மகிமையின் ரகசியம் இதுதான்.
3. உன்னால் எதையும் சாதிக்க முடியும்.
4. பாவங்களுள் மிகப் பெரிய பாவம் பயமே.
5. பிறருக்காக வாழ்பவர்களே வாழ்பவர்கள்.
6. சுயநலமின்மையே கடவுள்.
7. கடினமாக உழை, உன் லட்சியத்தில் வெற்றி அடைவாய்.
8. அன்பே வாழ்வு, பகைமையே சாவு.
9. தூய்மை, விடாமுயற்சி, செயல்திறன் – இந்த மூன்றும் தான் நான் வேண்டுவது.
10. ‘நான் ஒரு இந்தியன்’ என்று பெருமைப்படு.
11. தாயை வழிபடாத ஒருவன் மேன்மை பெற முடியாது.
12. நீ எதையும் சாதிக்க முடியும்.
13. உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை.
14. யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே, சுதந்திரமாக இரு.
15. நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய்.
16. மனிதன் தன் விதியைத் தானே அமைத்துக் கொள்கிறான்.
17. நீ எதைச் செய்தாலும் உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அதற்கு அர்பணித்து விடு.
18. பின்னால் திரும்பிப் பார்க்காதே, முன்னேறு.

19. தலை முதல் கால்வரை ஒவ்வொரு நரம்பிலும் செயல்துடிப்பு தேவை.

20. என் இளைஞர்களே, வேண்டுவதெல்லாம் உற்சாகம், உற்சாகமே.

21. உண்மை ஒன்றே வலிமையைத் தர முடியும், உண்மை ஒன்றே வாழ்க்கையைத் தர முடியும்.

22. பெண்கள் சிறக்காமல் உலகிற்கு நல்ல காலமில்லை, ஒரே இறக்கையுடன் பறவை பறக்க முடியாது.

23. சுதந்திரமே வளர்ச்சிக்கான முதல் நிபந்தனை.

24. கீழ்ப்படியத் தெரிபவனுக்கே ஆணையிடவும் தெரியும்.

25. நீ தலைவனாக விரும்பினால் அனைவருக்கும் தொண்டனாகு.

26. துக்கம் என்பது அறியாமையின் காரணமாகத்தான் ஏற்படுகிறது. வேறு எதனாலும் அன்று.

27. குறை கூறுவதை அடியோடு விடு.

28. அச்சமில்லை, அச்சமில்லை என்று முழங்கு, அச்சமே சாவு, அதுவே பாவம், அச்சமே நரகம்.

29. உயிர்களுக்குத் தொண்டு செய்பவன் இறைவனுக்குத் தொண்டு செய்தவனே ஆவான்.

30. இந்திய நாட்டின் ஜீவநாடி மதமே, அதை வலுப்படுத்துங்கள்.

31. தீமைக்குப் பதிலாக நன்மை செய்தல் என்ற கருத்து உருவாகியதே பாரதத்தில்தான்.
32. நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றது ஆகிவிடும்.
33. அடிமைகளின் குணமாகிய பொறாமையை முதலில் அழித்துவிடு.
34. அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து தந்தே தீரும்.
35. உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாகச் சேவைதான் செய்ய முடியும்.
36. உடற்பயிற்சி செய், உடலும் மனமும் ஒருங்கிணைந்து செல்ல வேண்டும்.
37. நான் எந்தக் குறைப்பாட்டையும் தாங்கிக் கொள்வேன், ஆனால் கோழைத்தனத்தை மட்டும் தாங்க முடியாது.
38. திடமான நம்பிக்கைகளே பெரும் செயல்களுக்கு வழிவகுக்கும்.
39. வரலாற்றில் எந்த ஆணோ, பெண்ணோ, சிறப்புடன் விளங்கினார்கள் என்றால், மற்ற எல்லாவற்றையும் விட முக்கிய காரணம் அவர்களது தன்னம்பிக்கைதான்.
40. இளைய தலைமுறையினரிடமே, நவீன தலைமுறையினரிடமே எனது நம்பிக்கை இருக்கிறது.

41. பொறாமையையும், ஆணவத்தையும் விட்டு, பிறர் நலத்திற்காகப் பணி செய்யக் கற்றுக்கொள்.

42. எல்லா நாடுகளிலும் ஏழைகளே பெரும் காரியங்களைச் செய்கிறார்கள்.

43. இதைக் கவனத்தில் வை, ஆன்மீக லட்சியத்தைப் புறக் கணித்துவிட்டு, மேலை நாட்டு உலகியல் நாகரீகத்தின் பின்னால் செல்வாயானால், அதன் விளைவாக மூன்றே தலைமுறைகளில் உனது இனம் அழிந்து போய்விடும்.

44. வெறும் பித்தலாட்டத்தின் மூலம் எந்தப் பெரிய செயலையும் சாதிக்க முடியாது.

45. எதுவெல்லாம் பொய்யானதோ, அங்கெல்லாம் விழிப்போடு இரு, உண்மையைப் பற்றியிரு.

46. மனிதன் அல்லவா பணத்தை உருவாக்குகிறான்! பணம் மனிதனை உருவாக்கியது என்று எங்கே நீ கேள்விபட்டாய்.

47. இரும்பைப் போன்ற தசையும் எஃகை ஒத்த நரம்புகளுமே நான் வேண்டுவது.

48. நாம் எல்லோருக்கும் கடுமையாக உழைப்போம், தூங்குவதற்கு இது நேரமில்லை, எதிர்கால இந்தியா நம் உழைப்பைப் பொறுத்தே அமையப் போகிறது.

49. நாம் எல்லாம் வல்ல இறைவனின் பிள்ளைகள், எல்லையற்ற தெய்வீகத் தீப்பொறிகள், நாம் எப்படி பூஜ்யங்கள் ஆவோம் ?

50. மகத்தான செயல்கள் செய்ய இறைவனால் நாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதை நம்பு.